2002 ஏப்ரல் 18]

அதற்கான கூடுதல் கட்டடம், கூடுதல் மருத்துவக் கருவிகள், கூடுதல் டாக்டர்கள், நிச்சயமாக ஏற்படுகிற வாய்ப்பிருக்கிறது.

இன்னும் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு பின்லாந்து நாட்டிலே இருக்கிற, Thermo Project என்ற நிறுவனத்தோடு, கடந்த ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், *86.00* கோடி ரூபாயை பின்லாந்து அரசு நமக்கு வழங்க இருக்கிறது. பின்லாந்து நாட்டிலேயிருந்து ஒரு குழுவினர் இந்த மாத இறுதியில் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் வரவிருக்கிறார்கள். அப்படி வந்து, இங்கே நம்முடைய தேவைகளை அறிந்து, நவீன மருத்துவக் கருவிகளை அவர்கள் வழங்க இருக்கிறார்கள். அப்படி *86.00* கோடி ரூபாய்க்கு பின்லாந்து அரசாங்கம் வழங்குகிற அந்த மருத்துவக் கருவிகள் முழுமையும், தமிழ்நாட்டிலேயிருக்கிற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கே வழங்கப்படும். அப்படி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், புறநகர் மருத்துவமனைகள் ஆகியவற்றுக்குத்தான் வழங்கப்படவிருக்கின்றன. எனவே அந்த நிதியின் மூலமாக தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனைக்கு கூடுதலான நவீனக் கருவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வகையிலே நிச்சயமாக தண்டையார்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை எதிர்காலத்திலே நல்ல விரிவாக்கத்திற்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *161*, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

161—

குடிநீர் மாசுபடுதல்

* *3754*—**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு காவிரி குடிநீர் வரும் இடங்களில் திறந்தவெளித் தொட்டி அமைத்து இருப்பதால் குடிதண்ணீர் மாசுபடுவது அரசுக்குத் தெரியுமா?

[2002 ஏப்ரல் 18

(ஆ) ஆம் எனில், அத்தொட்டியை உயர்த்திக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு காவிரி குடிநீர் வரும் வழிகளில் திறந்தவெளித் தொட்டிகள் அமைக்கப்படவில்லை. சுமார் 100 இடங்களில் வெவ்வேறு வகையான வால்வுகள் அமைக்கப்பட்டுள்ளதால், அதற்கான தொட்டிகள் அமைத்து கான்கிரீட் மூடிகள் போடப்பட்டுள்ளன. இத்தொட்டிகளில் அமைந்துள்ள வால்வுகளின் போல்ட், நட்டுகளை அப்பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் கழற்றி, அதிலே வடிகின்ற தண்ணீரை உபயோகத்திற்காக எடுத்து விடுகிறார்கள் என்பதால், அவ்வாறு எடுக்கக் கூடாது என்று அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வாரியத்தினுடைய பணியாளர்கள் பலமுறை எச்சரித்தும் அவர்கள் அதை மீண்டும், மீண்டும் செய்து வருகிறார்கள். அவ்வாறு எடுக்கப்படுகின்ற இடங்களில், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. மேலும், மீண்டும் அந்த இடங்களிலே போல்ட் நட்டுகளைக் கழற்றுவதால், அந்தப் பகுதிக்கு, அந்தக் குழாய்க்கு மீண்டும் தண்ணீர் செல்லாது என்பதையும் தெரிவித்து, மாசுபட சாத்தியம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு காவிரி குடிநீர் வரும் இடங்களில், ஏறத்தாழ 100 இடங்களுக்கு மேற்பட்ட இடங்களிலே, அந்தக் குடிநீர்க் குழாய்களை இணைக்கின்ற இடத்திலே, அதாவது அந்த joint-களிலே air valve அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த air valve-ஐச் சுற்றிலும், அந்த air valveனுடைய பாதுகாப்பிற்காக சிறிய தொட்டி போன்று அங்கே சிமெண்ட் தொட்டி அமைத்திருக்கிறார்கள். அந்த air value-களிலிருந்து கசியக்கூடிய அந்தக் குடிநீரானது, அந்தத் தொட்டியிலே நிரம்பி, அந்தத் தொட்டியிலிருந்து வெளியே வழிந்து செல்லக்கூடிய நிலை ஏற்படுகிறது. இந்தக் குடிநீர்க் குழாய்க்காக அமைக்கப்பட்டுள்ள அந்த air valve தொட்டிகள் பெரும்பாலும் அந்தச் சாலை ஓரத்திலே இருக்கின்ற காரணத்தினாலே, சாலையிலே செல்கின்ற வாகனங்களை அங்கே

2002 ஏப்ரல் 18]

நிறுத்தி, அந்த வாகனங்களைக் கழுவுவதற்காக அந்த நீரைப் பயன்படுத்துகிறார்கள். ஆக, வண்டியில் செல்லக்கூடிய மக்களும் அதைத் தவறாக, துணிகளைத் துவைப்பது, போன்றவற்றிற்கெல்லாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த வாகனத்திலிருந்து வெளியேறுகின்ற கிரீஸ் போன்றவை அந்தக் குடிநீரில் கலந்து குடிநீர்க் குழாய்க்குள்ளே சென்றுவிடுமோ என்று மக்கள் அச்சப்படுகின்றனர். ஆகையினாலே அமைச்சர் அவர்கள் கூறுகின்றதுபோல், மீண்டும் குடிதண்ணீருக்குள்ளே மாசு செல்லாது என்ற ஒரு கருத்தைக் கூறினாலும்கூட, மக்களுடைய பயத்தைப் போக்குகின்ற வகையிலே, அந்தத் தொட்டியை உயர்த்திக் கட்டாவிட்டாலும்கூட, அந்த covering slab என்று சொல்லக்கூடிய அந்த சிமெண்ட் தள மூடிகளைப் போட்டு, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அதை முறையாக பராமரிக்க வேண்டும்; பராமரிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருச்சியிலிருந்து பெறக்கூடிய இந்தக் குடிநீர் ஏறத்தாழ, திருச்சியிலே பம்பிங் செய்யப்பட்டு 80 கிலோமீட்டர் தூரம் தொடர்ந்து அந்த பம்பிங் குழாய் மூலமாக திருச்சியிலே குடி தண்ணீர் கிடைக்கப்பெற்று, மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. பம்பிங் செய்யக்கூடிய அந்த மின் மோட்டார்களுடைய செயல் திறன் இப்போது குறைந்துவிட்டது. 1993 ஆம் ஆண்டு முதன்முதலாக இந்த மின் மோட்டார் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது அதனுடைய செயல் திறனானது, அதிகாரிகளுடைய ஆய்வின்படி 11,000 எல்.பி.எம். திறனிலிருந்து, 8,500 எல்.பி.எம். திறனாகக் குறைந்துள்ள நிலையிலே 9 வருடங்களாக, சுமார் 22 மணி நேரமும் இயங்குகின்ற இந்த மின் குழாய்களின் மூலம், இந்த மின் மோட்டார்களுடைய செயல் திறன் குறைந்து விட்டதால், தற்போது குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்று, இந்த air valve-கள் மூலமாக குடிதண்ணீர் வெளியேறுகின்ற காரணத்தாலும் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு இந்தக் குடிதண்ணீர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகின்ற இந்த நேரத்திலே, சுமார் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இந்த மின் மோட்டார் மாற்றியமைக்கப்படுமா என்பதையும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

[2002 ஏப்ரல் 18

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மோட்டாருடைய திறனைக் கூட்ட வேண்டுமென்று கூறியிருக்கின்றார். அந்த குறிப்பிட்ட இடங்களிலே தண்ணீர் வெளியே வராத அளவிற்கு துறையின் மூலமாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

162—

அச்சு இயந்திரங்கள்

*2775—**திரு. ஐ. கணேசன்:**

திரு. ஜி.கே. மணி:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் அச்சகங்களில் அச்சு இயந்திரங்கள் நவீனமயமாக்கப்படுமா?

(ஆ) அதில் கணினி முறையில் அச்சு வேலை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆப்செட் முறை செயலாக்கம் செய்யப்பட்ட அரசு அச்சகங்களில் கணினி முறையில் அச்சு வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய அச்சு இயந்திரங்கள் ஆப்செட் முறையிலே, கணினி முறையிலே இயக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் பதில்